பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 09 2026 SATURDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நீர் பாதுகாப்பின் அவசியம் குறித்து மத்திய அமைச்சர் திரு. C.R. Patil வலியுறுத்தியுள்ளார்.

3. ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த Baranica Elangovan-னுக்கு 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

4. தேர்தல் பிரச்சாரங்களில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தும் த.வெ.க.வின் செயல் கண்டனத்திற்குரியது என்று பிஜேபி கூறியுள்ளது.

5. ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா-ஏ அணி வெற்றி பெற்றது.

>>>>>>><<<<<<<

கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் நடைபெற்ற சேவை உறுதிமொழி பேரணியில் பங்கேற்றவர்களுடன் காணொலி மூலம் அவர் கலந்துரையாடினார்.

கடந்த 12 ஆண்டுகளில் நாடுமுழுவதிலும் உள்ள பெண்களின் சுயசார்பு மற்றும் பொருளாதார நிலை மேம்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சமூக மாற்றத்திற்கு சேவை மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறித்து அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், அனைவரது பங்களிப்பும் அவசியம் என்று அவர் கூறினார்.

சமூக சேவையில் எண்ணற்ற இளைஞர்கள் பங்கேற்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

நீர் பாதுகாப்பின் அவசியம் குறித்து மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. C.R. Patil வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நீர் பாதுகாப்பு குறித்த சர்வதேச கருத்தரங்கில் நிறைவுரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

நீர் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் மக்கள் பங்கேற்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

நீர் பங்கீடு தொடர்பான விவகாரங்களுக்கு, நாடுகள் மற்றும் நிறுவனங்கள் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும் என்று அவர் கூறினார்.

நீர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்தும் மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் திரு. C.R. Patil பட்டியலிட்டார்.

>>>>>>><<<<<<<

புலிகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற புலிகள் பாதுகாப்பு பயிலரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர், வனத்துறை மற்றும் உள்ளூர்வாசிகளுக்கு இடையே இணக்கமான உறவை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்,

வனவிலங்குகள் பாதுகாப்பில் அறிவியல்பூர்வமான செயல்முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>>>>><<<<<<<

நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 800ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் 71வது நிறுவன தின விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் ஒரு லட்சத்து 30 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ படிப்பிற்கான இடங்களை மேலும் 75 ஆயிரமாக உயர்த்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சுகாதார சேவையில் மருத்துவர்களின் பணி போற்றத்தக்கதாக உள்ளது என்று திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

>>>>>>>><<<<<<<

ஆரோக்கியம் என்பது உடல் மற்றும் மனநலனை மையமாக கொண்டது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், கடந்த பத்தாண்டுகளில், நவீன மருத்துவ வசதிகளுடன் ஆயுர்வேதம், யோகா மற்றும் நலவாழ்வு மையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

சுகாதார சேவைகள் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளை உருவாக்குவதில் மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறையினர் இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<

ஆசிய விளையாட்டு போட்டியின் Pole Vault பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த Baranica Elangovan-னுக்கு முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியால் இந்த வெற்றியை பெற்றுள்ள அவரது சாதனையை பாராட்டியுள்ளார்.

அவரது இந்த வெற்றி, இளம் வீரர்களுக்கு புதிய நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளிக்கும் என்று திரு. விஜய் கூறியுள்ளார்.

பதக்கம் வென்ற அவருக்கு 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

தேர்தல் பிரச்சாரங்களில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தும் த.வெ.க.வின் செயல் கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேர்தல் பணிகளில் சிறார்களை ஈடுபடுத்துவதற்கு எதிரான தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பிரச்சாரத்தின் போது சிறார்களை ஈடுபடுத்தும் கட்சிகள் மீது குழந்தை தொழிலாளர் தடை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேநதிரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் விவரங்கள் சரிபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு தடையின்றி உணவு பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் மின்னணு முறையிலான சரிபார்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் மின்னணு சரிபார்ப்பு நடவடிக்கையை 100 சதவீதம் நிறைவு செய்யும் வகையில், இன்று மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாம் காலை 9 மணிக்கு தொடங்கி, மாலை 5 மணிவரை நடைபெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் இந்த முகாம்கள் நடைபெறாது.

>>>>>>>><<<<<<<

யுபிஐ பயன்பாடு இல்லாத தினத்தை கடைபிடிக்க வேண்டும் என்ற எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை என்று அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், அக்டோபர் 2-ம் தேதி, நாடு தழுவிய யுபிஐ பயன்பாடு இல்லாத தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஒருசில இடங்களில் அடுத்த நான்கு தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

***இருவரிச் செய்திகள்***

ஜெர்மனியில் கட்டாய ராணுவ சேவையை மீண்டும் அறிமுகப்படுத்தும் அந்நாட்டு அரசின் முயற்சிகளுக்கு எதிராக பள்ளி மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>>>>><<<<<<<

மொராக்கோவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், எந்தவொரு கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காத நிலையில், கூட்டணி ஆட்சி அமைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தை ஒட்டிய எல்லைப் பகுதியில், அந்நாட்டு ராணுவம் நடத்திய தாக்குதலில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>>>><<<<<<<

உத்தரபிரதேச மாநிலம், கிரேட்டர் நொய்டாவில் சர்வதேச வர்த்தக கண்காட்சியை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<

தில்லியில், வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் இம்மாதம் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

>>>>>>>><<<<<<<

ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு மானிய உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், ஆட்சியர் திருமதி. பத்மஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தனியார் கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்விக்கான வழிகாட்டு முகாம் நேற்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

>>>>>>>><<<<<<<

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்தில் சுகாதாரமற்ற முறையில் செயல்பட்டு வந்த 3 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

>>>>>>>><<<<<<<

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள ஏதுவாக 61 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா-ஏ அணி வெற்றி பெற்றது.

மொஹாலியில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா-ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 362 ரன் எடுத்தது.

363 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த இந்தியா-ஏ அணி 48.2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 364 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

>>>>>>>><<<<<<<

இந்தியா - பனாமா அணிகளுக்கு இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி டிராவில் முடிந்தது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

>>>>>>>><<<<<<<